இனிமையான குழந்தைகளே! ஏதேனும் விகர்மங்களைச் செய்து விட்டு மறைக்கக் கூடாது. மறைத்து விட்டு சபையில் அமருபவர்களுக்கு அதிகமான தண்டனைகள் கிடைக்கும். ஆகையால் எச்சரிக்கையுடன் இருங்கள், விகாரங்களின் கடுமையான தவறுகள் ஒருபொழுதும் ஏற்பட்டு விடக் கூடாது.

கேள்வி: எந்த இலட்சியத்தை எதிரில் வைத்துக் கொண்டு முயற்சியில் சதா முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும்?

பதில்: நாம் நல்ல குழந்தைகளாக ஆகி தாய், தந்தையின் சிம்மாசனத்தில் அமர வேண்டுமென்ற இலட்சியம் இருக்கின்றது. ஒவ்வொரு அடியிலும் தாய், தந்தையைப் பின்பற்ற வேண்டும். குலத்தின் பெயர் கெட்டுப் போகின்ற நடத்தைகள் எதுவும் இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட நல்ல குழந்தைகள் தன்னை யாத்திரீகன் என்று நினைத்து யாத்திரையில் சதா ஆர்வத்துடன் இருப் பார்கள். யாத்திரீகர்கள் ஒருபொழுதும் யாத்திரையில் பதீதமாக ஆகமாட்டார்கள். ஒருவேளை யாராவது விகாரத்திற்கு வசமானார்களெனில் சத்தியநாசமாகி விடுவார்கள். பிறகு அதிக வேதனைப்படுவார்கள்.

பாடல்: குழந்தைப்பருவத்தை மறந்து விடாதீர்கள் ....... ஓம் சாந்தி.

இது குழந்தைகளுக்கான பாட்டாகும். மம்மா, பாபா என்று கூறிக் கொண்டு பிறகு விகாரத்தில் சென்றால் அவர்கள் இறந்து விட்டனர் என்று புரிந்து கொள்ளுங்கள். இந்த இலட்சியம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதாகும். நான் அந்த பரம்பிதா பரமாத்மாவின் குழந்தையாக இருக்கின்றேன் மற்றும் விசித்திரமாக இருக்கின்றேன். உண்மை யில் நான் அங்கிருக்கும் பொழுது எனக்கென்று எந்த சித்திரமும் (உடல்) கிடையாது. பிறகு சித்திரத்தை எடுத்து 84 பிறப்புகளை அனுபவித்து இப்பொழுது நான் ஈஸ்வரனின் குழந்தையாக ஆகியிருக் கின்றேன். ஈஸ்வரிய குழந்தை என்ற நம்பிக்கை ஏற்பட்ட பின் விகாரத்தில் சென்றால் இறந்து விட்டீர்கள். தந்தை, சுகம் கொடுப்பவராகவும் இருக்கின்றார் கூடவே தர்மராஜரின் மூலமாக கணக்கையும் பூர்த்தி செய்வார் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். தந்தை துக்கம் கொடுப்பதில்லை. அவர் சுகம் கொடுக்கும் வள்ளலாக இருக்கின்றார். ஆனால் அரசாங்கத்தின் கூடவே தர்மராஜர் அதாவது பெரிய நீதிபதியும் இருக்கின்றார். ஒருவருக் கொருவர் உறுதிமொழியை எடுக்க வைப்பார்களல்லவா! இங்கு சுயம் பகவான் கூறுகின்றார் - ஒருவேளை நீங்கள் விகாரங் களில் சென்று பதீதமாக ஆகிவிட்டு கூறவில்லையெனில் நூறு மடங்கு தண்டனை கிடைக்கும். தந்தையின் குழந்தையாக ஆகி பிறகு மறைத்து நரகத்தின் வாசலாக ஆகிவிட்டு, பாபாவிற்கு செய்தி கூறவில்லையெனில் ஒரேயடியாக இறந்து விடுவீர்கள். பிறகு எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் வெற்றியடைய முடியாது. பாபா விடுதலை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். அதிகமான குழந்தைகள் மறைத்துக் கொண்டிருக் கின்றனர். விகாரத்தில் செல்வது மிகப் பெரிய பாவமாகும். மறைத்து விட்டால் இறந்து விடுவீர்கள். அப்படிப்பட்ட குழந்தைகள் குழந்தைகளாக ஆகாமல் இருப்பதே நல்லது. நல்ல குழந்தையாக இல்லையெனில் இந்த குழந்தை இறந்து விட்டால் நல்லது என்று தந்தை கூறுவாரல்லவா! பாபாவிற்கு எதுவும் தெரியாது என்று யாரும் நினைத்து

விடாதீர்கள். ஆம், இவர் (பிரம்மா) வெளி விஷயங்களை மட்டும் அறிந்தவராக இருக்கலாம், இவருக்குத் தெரியாது. ஆனால் அந்த பாபா மிக நல்ல முறையில் அறிந்திருக்கின்றார். தந்தை கூறுகின்றார் - எனக்கு சுகம் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரின் நடத்தையின் படி தண்டனைகள் கிடைக்கின்றது. பாபா அனைவருக்கும் கூறுகின்றார். இதிலும் குறிப்பாக பெண்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒருபொழுதும் பொய் பேசக் கூடாது. ஆண்களை விட பெண்களின் மீது பாபாவிற்கு அதிகமான கருணை இருக்கின்றது. ஏனெனில் பெண்கள் அதிகமாக துன்பப்படுகின்றனர். தந்தை வந்து தாய்மார்களின் மீது கலசத்தை வைக்கின்றார். ஆக தாய்மார்களின் மீது அதிகமான பொறுப்புகள் இருக்கின்றன. பாபா விகாரத்திற்காக கூறும் அளவிற்கு கோபத்திற்கு கூறுவதில்லை. உண்மையில் எந்த பதீதமானவர்களும் இந்த சபை யில் அமர முடியாது. சில நேரங்களில் பதீதமானவர்களுடன் சந்திப்பு செய்ய வேண்டியும் இருக்கின்றது. பெரிய மனிதர்கள் மிகவும் பதீதமானவர்களாக இருப்பார்கள். ஏனெனில் அவர் களிடத்தில் பணம் இருக்கின்றதல்லவா! ஆகையால் தாய்மார்கள் தான் விகாரத் திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அழைக்கின்றனர். அனைவரும் துக்கமானவர் களாக இருக் கின்றனர். தாய்மார்களின் கூக்குரலைக் கேட்டு தந்தை வருகின்றார். தாய்மார்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நீலாம்பரி, புக்ராஜ்பரி ..... என்று தாய்மார்களின் பெயர்கள் உள்ளன.

பாபா எச்சரிக்கை செய்கின்றார் - இங்கு அசுரனிலிருந்து தேவதைகளாக ஆக்கப்படுகின்றனர். பதீதமானவர் களை அசுரன் என்று கூறப்படுகின்றது. இந்த முழு உலகமும் அசுர, பதீத உலகமாகும். பதீத உலகில் பாவனமானவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். சந்நியாசிகளும் கூட தேவைதைகளைப் போன்று பாவனமானவர் கள் கிடையாது என்று புரிய வைக்கப் படுகின்றது. இருப்பதும் பதீத உலகத்தில் தான். துறவறமார்கத்தில் இருக்கின்றனர். சத்யுகத்தில் அனைவரும் தூய்மையான, முழுமையாக விகாரமற்றவர்களாக இருந்தனர். நீங்கள் முழுமை யாக பாவனமாவதற்காக இங்கு வந்திருக்கின்றீர்கள். ஏனெனில் இது முழுமையான பதீத உலகமாகும். ஒருவர் கூட பாவனம் கிடையாது. திரேதா யுகத்திலும் 2 கலைகள் குறைந்து விடுகின்றது என்று கூறலாம். சத்யுகத்தில் 16 கலைகள், திரேதா யுகத்தில் இரண்டு கலைகள் குறைந்து விடுகின்றன. ஆகையால் அவர்கள் சத்ரியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இரண்டு கலைகள் குறைகின்ற காரணத்தினால் சிறிது குறைகள் ஏற்பட்டு விடுகின்றன. உண்மையில் திரேதாவை சொர்க்கம் என்று கூறப்படு வதில்லை. சொர்க்கம் என்றாலே சத்யுகமாகும். சத்யுகத்திற்காக குழந்தைகள் தயார் ஆக வேண்டும். விகாரத்தில் விழுந்து விட்டால் சொர்க்கத்திற்கு வர முடியாது. பதீதமாக ஆகாமல் இருப்பது தான் முக்கிய விசயமாகும். சிவபாபா அறிந்திருக்கின்றார் அல்லவா! ஆனால் ஒவ்வொருவரிடத்திலும் எந்த அளவிற்கு கேட்டுக் கொண்டே இருக்க முடியும். அசுத்தமாக ஆன பின்பு மறைத்தால் மிக மிக அதிகமான தண்டனை அனுபவிக்க வேண்டி வரும். டிரிபுனல் அமர்ந்திருக்கின்றனர், பிறகு இந்த பாபாவும் அமருவார். தர்மராஜரும் அமருவார். பிறகு தர்மராஜர் கூறுவார் - நீங்கள் இந்த நேரத்தில் விகாரத்தில் சென்றிருக்கின்றீர்கள் மேலும் சபையில் வந்து அமர்ந்தீர்கள். கூறவே யில்லை, தண்டனையை அனுபவியுங்கள். ஆகையால் பாபா கூறுகின்றார் - மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஒருபொழுதும் விகாரத்தில் செல்லக் கூடாது, பிறகு இங்கு அமர முடியாது. இவ்வாறு அதிகமான சென்டர்களில் வந்து அமருகின்றனர். பாபா அறிந்திருக் கின்றார் - சொல்லாமல் வந்து அமர்ந்தால் ஏதாவது சில நேரங்களில் மீண்டும் அசுரர்களாக ஆகி தடைகள் போடுவீர்கள். துரோகிகளாக ஆகி விடுவீர்கள். குழப்பம் ஏற்படுத்த ஆரம்பித்து விடுவீர்கள். இதனையே பதீத இராஜ்யம், முட்களால் ஆன உலகம் என்று கூறப்படுகின்றது. இராஜா, இராணி கிடையாது. பெரிய அமைச்சர் எப்படியோ அப்படியே பிரஜைகள். அவர்கள் இந்த விசயங்களைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். சத்திய தந்தையிடத்தில் சத்தியமானவர் களாக இருக்க வேண்டும். சத்திய உள்ளத்தைப் பார்த்து தந்தை மகிழ்ச்சி அடைகின்றார். புத்தியின் பூட்டை திறந்து விடுவார். சத்திய உள்ளம் இல்லையெனில் பூட்டைத் திறக்க மாட்டார். பிறகு வாடிக் கொண்டே இருப்பீர்கள். விக்னங்கள் வந்து கொண்டே இருக்கும். ஆகையால் பாபா புரிய வைக்கின்றார். சாஸ்திரங்களிலும் எழுதப்பட்டிருக் கின்றது - இந்திர சபையில் சாத்தான்கள் மறைந்து வந்து அமர்ந்து விட்டனர். இங்கு அதாவது சென்டர்களிலும் அவ்வாறே வந்து அமர்ந்து விடுகின்றனர். எதைப் பார்க்கின்றனர் எனில் கன்னிகைகளைப் பார்க்கின்றனர். சஞ்சலம் ஏற்படுத்துகின்றனர்.

இப்பொழுது எல்லையற்ற தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார், உலகத்தினர் அறிந்திருக்கவில்லை. கீதையில் தந்தைக்குப் பதிலாக கிருஷ்ணரின் பெயரைப் போட்டு விட்டனர். பகவான் சுயம் ஞானக் கடலாக இருக்கின்றார். அவர் வந்து புரிய வைக்கின்றார். அந்த தந்தையை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். ஏனெனில் இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும். நீங்கள் இப்பொழுது நினைவு யாத்திரையில் இருக்கின்றீர்கள். யாத்திரை யில் செல்லும் பொழுது விகாரத்தில் விழுந்து விட்டால் துண்டு துண்டாக ஆகி விடுவீர்கள். நான் யாத்திரையில் இருக்கின்றேன், விகாரத்தில் செல்லக் கூடாது என்ற எண்ணம் இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் உலகம் மிகவும் அழுக்காக இருக்கின்றது. தீர்த்தங்களிலும் வழிகாட்டிகள் மிகவும் அழுக்கானவர்களாக இருக்கின்றனர். பாபா மிகுந்த அனுபவியாக இருக்கின்றார். ஆக தந்தை வந்து அதிகமாக கன்னிகைகள் மற்றும் தாய்மார்களை முன்னேற்று கின்றார். ஜெகதம்பா சக்தி சேனை என்று பெயர் பாடப்பட்டுள்ளது. பாபா புரிய வைக்கின்றார், நான் எப்படிப்பட்ட செயல்களை செய்கின்றேனோ என்னைப் பார்த்து மற்றவர்களும் செய்வார் கள் என்ற எண்ணம் இருக்க வேண்டும். ஒருவேளை பி.கு. களிடத்திலேயே ஏதாவது விகாரம், தேகாபிமானம், அல்லது பேராசை போன்றவைகள் இருந்தால் சேவை செய்ய முடியாது. பிறகு தோல்வி அடைந்து விடுவீர்கள். மனிதர்கள் கோபமடைந்து விடுவார்கள். நல்ல பிரம்மா குமாரியாக இருந்தால் கண்டிப்பாக நல்ல கடையை நடத்துவார்கள். நன்றாக சேவை செய்பவர் கள் மகாராஜா, மகாராணியாக ஆகின்றனர். குறைந்த சேவை செய்பவர்கள் மகாராஜா, மகாராணியிடத்தில் வேலைக்காரர்களாக ஆவார்கள். லெட்சுமி, நாராயணனிடத்தில் வேலைக் காரர்கள் இருப்பார்களல்லவா! அவர்கள் இராஜா, இராணியிடத்தில் இருப்பார்கள். இங்கு நீங்கள் மனிதனிலிருந்து தேவதைகளாக ஆகின்றீர்கள். நீங்கள் யாத்திரையில் இருக்கின்றீர்கள். யாத்திரையை மறந்தால், சிவபாபா மற்றும் இனிய வீட்டை மறந்தால் மாயையின் அடி மிக பலமாக ஏற்பட்டு விடும். நீங்கள் அதிகமான முயற்சி செய்ய வேண்டும். விகாரத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

இங்கு எந்த விசயமும் மறைக்க முடியாது. சிவபாபாவிடத்தில் எதையும் மறைக்க முடியாது. அவர்களுக்கு தண்டணை கொடுத்தே ஆக வேண்டும்.

தாய், தந்தையைப் பின்பற்றுங்கள்...... என்று கூறப்படுகின்றது. தந்தை தானாகவே எதையும் செய்து விடமாட்டார். பாபாவிடத்தில் அதிகமானவர்கள் வருகின்றனர். அவர்களது பேச்சின் மூலமாகவே இவர்கள் பதீதமானவர்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். கஷ்டப்பட்டு தூய்மையாக இருந்திருப்பார்கள். சந்தேகம் ஏற்படுகின்றது, பிறகு முரளியில் புரிய வைக்க வேண்டியிருக்கின்றது. அதிகமானவர்கள் மறைக்கின்றனர். யாத்திரை நேரத்தில் விகாரத்தில் செல்வது மிகவும் தவறாகும். உங்களால் வெற்றி மணி மாலையில் வர முடியாது. நான் சூரியவம்சத்தினராக ஆக வேண்டும் என்று விரும்புகின்றீர்க ளெனில் யாத்திரையின் பொழுது ஒருபொழுதும் அசுத்தமாக ஆகக் கூடாது. யாத்திரையில் இருக்கின்றேன் என்பதை மறந்து கொண்டே இருக்கின்றனர். சிலர் முழு நாளில் ஒரு மணி நேரம், அரை மணி நேரம் கூட நினைவு செய்வதில்லை. பாபாவின் நினைவில் இருப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. பிறகு ராயலான வம்சத்தில் வந்து தாச, தாசிக் கான பதவியை அடைகின்றனர். முயற்சி செய்து தாய் தந்தையின் சிம்மாசனத்தில் அமர்ந்து காண்பியுங்கள். இல்லையெனில் நல்ல முறையில் நடக்காத குழந்தை என்று தந்தை கூறுவார். பிராமணர்களாகிய நீங்கள் யாத்திரையில் இருக்கின்றீர்கள். ஒருவேளை குலத்தைக் களங்கப்படுத்தும் அளவிற்கு நடந்து கொண்டால் அதிகமான தண்டனையை அனுபவிப்பீர்கள். ஜென்ம, ஜென்மங்களுக்கு கர்ப சிறைப் பறவை களாக இருந்தீர்கள். இந்த நேரத்தில் அனைத்து மனிதர்களும் சிறைப் பறவைகளாக இருக் கின்றனர். அடிக்கடி தண்டனையை அனுபவிக்கின்றனர். நீங்கள் இப்பொழுது கர்பமாளிகைக்குச் செல்ல வேண்டும். ஆக எவ்வளவு முயற்சி செய்ய வேண்டும்! நீங்கள் எங்கிருந்தாலும் சரி, இரயிலில் இருந்தாலும் சரி யாத்திரையில் இருக்கின்றீர்கள், நினைவில் இருக்க வேண்டும். நான் நாராயணன் அல்லது லெட்சுமியை அடைவேன் என்று அனைவரும் கூறுகின்றீர்கள். அவ்வாறு இருந்து காண்பியுங்கள். பதவியடையவில்லையெனில் மற்றபடி என்ன செய்தீர்கள்! பாபா எச்சரிக்கை கொடுத்து விடுகின்றார். பாபாவிடத்தில் வரும் பொழுது பாபா நல்ல முறையில் மகிழ்விக்கின்றார். குரங்கைப் போன்று சிலரிடத்தில் மோகம் என்ற புழு உள்ளது. சொந்த பந்தங்களிடமிருந்து புத்தி தொடர்பானது துண்டிக்கப்படுவது கிடையாது. அசுத்தமாக ஆகக் கூடியவர்கள் - பாபா, நான் தோல்வியடைந்து விட்டேன். காமம் என்ற பெரிய பள்ளத்தில் விழுந்து விட்டேன் என்று எழுதுகின்றனர். துண்டு துண்டாகி விடுகின்றனர். பாபா எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கின்றார் - நீங்கள் யாத்திரையில் இருக்கின்றீர்கள். இங்கு காம விகாரம் இருக்கக் கூடாது. இல்லையெனில் மிகவும் துக்கமானவர்களாக ஆவீர்கள். தந்தையிடமிருந்து வைகுண்டத் திற்கான ஆஸ்தியடைய வேண்டுமெனில் மறந்தும் கூட தன்னை இவ்வாறு சத்தியநாசம் செய்து கொள்ளக் கூடாது. காமம் மிகப் பெரிய எதிரியாக இருக்கின்றது. முதல், இடை, கடை துக்கம் கொடுக்கக் கூடியதாக இருக் கின்றது. மரண உலகத்தில் அனைவரும் முதல், இடை, கடை துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக் கின்றனர். சத்யுகத்தை அமர லோகம் என்று கூறப்படுகின்றது. அமர்நாத் சிவபாபாவிடமிருந்து கதை கேட்பதன் மூலம் இராஜ்யம் கிடைக்கின்றது. முதியவர்கள் மற்றும் கன்னிகைகள் விகாரத்திலிருந்து பாதுகாப்புடன் இருக்கின்றனர். விதைவைகளும் மிகுந்த

பாக்கியசாலிகளாக இருக்கின்றனர். பதிகளுக்கெல்லாம் பதியாக சிவபாபா இருக்கின்றார். ஈஸ்வரிய பாடசாலையில் வந்து முரளி கேட்டால் புதுப்புது விசயங்களைக் கேட்பீர்கள். எல்லையற்ற தந்தை சொர்க்கம், தூய்மையான உலகிற்கு எஜமானர்களாக ஆக்குகின்றாரெனில் உடனேயே தூய்மையாக வேண்டுமல்லவா! தூங்கி வழிந்து கொண்டும், விஷத்தை அருந்திக் கொண்டும் இருந்தால் தாரணை ஏற்படாது. இதில் தங்கப் பாத்திரம் தேவை. தந்தை அகங்காரம் அற்றவராகி இந்த பதீத உலகிற்கு வர வேண்டியிருக்கின்றது. என்னை குழந்தைகள் மட்டுமே அறிந்திருக்கின்றனர். அவர்களிலும் மாயை சிலரை மூக்கைப் பிடித்து கீழே தள்ளி விடுகின்றது. அவர்கள் மரியாதை கொடுப்ப தில்லை. ஆஹா! பகவான் எனக்கு படிப்பிக்கின்றார்! நான் எவ்வளவு பாக்கியசாலியாக இருக் கின்றேன்! பாபா, எவ்வளவு சாதாரண சரீரத்தில் அமர்ந்திருக்கின்றார். குழந்தை களாகிய நீங்களும் அகங்காரமற்றவர்களாக ஆக வேண்டும். அவர் நிராகாரமானவராக இருக்கின்றார். தேக அகங்காரம் அவருக்கு இருக்க முடியாது. நீங்களும் அகங்காரமற்றவர்களாக ஆகுங்கள். நீங்கள் இறந்து விட்டால் உங்களுக்காக உலகமும் இறந்து விடும். நான் இப்பொழுது பாபா விடத்தில் செல்ல வேண்டும். இந்த சுடுகாட்டை ஏன் நினைவு செய்ய வேண்டும்? தனக்குள் இப்படிப்பட்ட விசயங்களைப் பேசிக் கொண்டிருந்தால் குஷியின் அளவு அதிகரிக்கும். மேலும் சதா முக மலர்ச்சியுடன் இருப்பீர்கள்.

நான் பாபாவின் கூடவே யாத்திரையில் இருக்கின்றேன். பாபா அழைத்துச் செல்வதற்காகவே வந்திருக்கின்றார். மாயை காதை அறுக்குமளவிற்கு இருக்கக் கூடாது. பிறகு கேட்டாலும் தாரணை ஏற்படாது. குஷியின் அளவு அதிகரிக்காது. அதிகமானவர்களுக்கு தானம் செய்தால் அதிகமானவர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும். ஞான மார்க்கத்தில் அனைவரிடத்திலும் மிக இனிமையானவர்களாக இருக்க வேண்டும். உப்புத் தண்ணீராக ஆகக் கூடாது. விகார சம்பந்தம் மற்றும் தெய்வீக சம்பந்தங்களிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். இரண்டு பக்கமும் அன்பானவர்களாக ஆக வேண்டும். தந்தையும் தனது நல்ல குழந்தைகளைப் பார்த்து குஷியடைகின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) இப்பொழுது நாம் யாத்திரையில் இருக்கின்றோம், ஆகையால் மிக கவனமாக நடந்து கொள்ள வேண்டும். கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டும்.

2) தந்தைக்குச் சமமாக அகங்காரமற்றவர்களாக ஆக வேண்டும். நாம் பாபாவிடத்தில் செல்ல வேண்டும், ஆகையால் அனைத்திலும் இருக்கும் பற்றுதலை நீக்கி விட வேண்டும். தனக்குள் தானே பேசிக் கொண்டு முக மலர்ச்சியுடன் இருக்க வேண்டும்.

வரதானம் : செய்ய வைக்கக்கூடியவர் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார், இந்த நினைவு மூலம் நிமித்தமானவராகி ஒவ்வொரு செயலையும் செய்யக்கூடிய கவலையற்ற மகாராஜா ஆகுக.

நடத்தக்கூடியவர் நடத்திக் கொண்டிருக்கிறார், செய்ய

வைக்கக்கூடியவர் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார் - இந்த நினைவு மூலம் நிமித்தமானவர் ஆகி ஒவ்வொரு காரியத்தையும் செய்தீர்கள் என்றால் கவலையற்ற மகாராஜாவாக இருப்பீர்கள். நான் தான் செய்துக் கொண்டி ருக்கிறேன் - இந்த உணர்வு வந்து விட்டால் கவலை யற்றவராக இருக்க முடியாது. ஆனால் பாபா மூலம் நிமித்தமானவராக இருக்கிறேன் - இந்த நினைவு வருத்த மற்றவராகவும் கவலை யற்ற வாழ்க்கையை அனுபவம் செய்ய வைக்கிறது. நாளை என்ன நடக்குமோ, அதை பற்றிய கவலை இல்லை. என்ன நடக்கிறதோ, அது நன்றாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, எது நடக்க வேண்டுமோ அதுவும் மிக நன்றாகவே நடக்கும், ஏனெனில் நடத்தக்கூடியவர் அனைவரையும் விடவும் நல்லவராக இருக்கிறார் என்ற நம்பிக்கை இருக்கும்.

சுலோகன்: தனது அமைதி மற்றும் சுகத்தின் வைப்ரேஷன் மூலம் ஒவ்வொருவருக்கும் சுகம் மற்றும் அமைதியின் அனுபவம் செய்ய வைக்கக்கூடியவர்கள் தான் உண்மையான சேவாதாரி என்று சொல்ல முடியும்.